




புதுகை **வரலாறு** நாளிதழ்

WWW.VARALARUU.COM  VARALARUU  PUDUGAIVARALARU  VARALARUU  7502051351








ஞாயிறு ❖ மே. 14, 2023 | புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 219 ❖ ரூ.10


## கர்நாடகாவில் அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கிறது காங்கிரஸ்

# சாதனை

### மக்களுக்கு அளித்த 5 வாக்குறுதிகளும் முதல் அமைச்சரவை கூட்டத்திலேயே நிறைவேற்றப்படும்: ராகுல்காந்தி
### மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற காங்கிரஸ் கட்சிக்கு எனது வாழ்த்துக்கள்: பிரதமர் மோடி

**பெங்களூரு, மே. 14-**
**கர்நாடகாவில் அறுதிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று காங்கிரஸ் ஆட்சி அமைக்கிறது.**

கர்நாடக சட்டப்பேரவையின் மொத்தமுள்ள 224 தொகுதிகளுக்கு நடைபெற்ற பொதுத் தேர்தலில் பதிவான வாக்குகள் மாநிலம் முழுவதும் உள்ள 36 மையங்களில் எண்ணப்பட்டது. இதில் 8 மணி நிலவரப்படி காங்கிரஸ் கட்சி - 136, பாஜக - 64, மஜத - 20, மற்றவை- 4 இடங்களில் முன்னிலையில் இருந்து வருகின்றன.



இதில் ஆட்சி அமைப்பதற்கு 113 இடங்கள் தேவையான நிலையில் 117 இடங்களில் வெற்றி பெற்று அறுதிப் பெரும்பான்மையுடன் காங்கிரஸ் ஆட்சி அமைக்கிறது.

பாஜக இதுவரை 51 இடங்களில் வெற்று பெற்றுள்ளது. மற்ற கட்சிகள் 4 இடங்களில் வெற்றி பெற்றுள்ளன.

தேர்தல் முடிவுக்குப் பின் ராகுல் காந்தி பேசும்போது " பெரும் முதலாளிகளை எளிய மக்கள் வீழ்த்தியுள்ளனர். கர்நாடகாவில் வெறுப்புச் சந்தை மூடப்பட்டு, அன்பு நிலையம் திறக்கப்பட்டுள்ளது. வெறுப்பரசியலை கையிலெடுக்காமல் அன்பின் அடிப்படையில் இந்த தேர்தலில் காங்கிரஸ் வென்றுள்ளது. கர்நாடகா மக்களுக்கு நாங்கள் 5 வாக்குறுதிகளை கொடுத்திருந்தோம். முதல் அமைச்சரவை கூட்டத்திலேயே அந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும். இந்த யுத்தத்தில் நாங்கள் வெறுப்பைக் கொண்டு சண்டையிடவில்லை. அன்பின் மூலம் சண்டையிட்டோம். இந்த தேசம் அன்பின் மீது நம்பிக்கை கொண்டுள்ளது என்பதை கர்நாடக மக்கள் நிரூபித்துள்ளனர். மக்களுக்கும், காங்கிரஸ் தொண்டர்களுக்கும் நான் எனது இதயத்தின் ஆழத்திலிருந்து நன்றியையும் வாழ்த்துகளையும் கூறிக் கொள்கிறேன்." என்று பேசினார்

தேர்தல் முடிவுகள் குறித்து செய்தியாளர்களிடம் பேசிய முதல்வர் பசவராஜ் பொம்மை, "பிரதமர் நரேந்திர மோடி, பாஜக தலைவர்கள், தொண்டர்கள் என அனைவரும் கடுமையாக முயற்சித்தும் எங்களால் போதிய எண்ணிக்கையில் வெற்றி பெற முடியவில்லை. தேர்தல் முடிவுகள் முழுமையாக வந்த பிறகு அதுகுறித்து விரிவான ஆய்வு நடத்தப்படும். இந்த முடிவினை வரும் மக்களவைத் தேர்தலுக்கான பாடமாக ஏற்றுக்கொள்கிறோம்" என்று தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து பிரதமர் மோடி தனது ட்விட்டர் பக்கத்தில், " கர்நாடக சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்ற காங்கிரஸ் கட்சிக்கு எனது வாழ்த்துகளை தெரிவித்து கொள்கிறேன். மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற அவர்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

கர்நாடக தேர்தலில் எங்களுக்கு ஆதரவு அளித்த அனைவருக்கும் என் நன்றியை தெரிவித்து கொள்கிறேன். பாஜக கட்சி தொண்டர்களின் கடின உழைப்பை நான் பாராட்டுக்கிறேன். இனி வரும் காலங்களில் கர்நாடகாவிற்கு இன்னும் பலத்துடன் பணி செய்வோம்" என்று பதிவிட்டுள்ளார்.

## காங்கிரஸ் கொண்டாட்டம்

பாஜகவை வென்று தனிப்பெரும்பான்மையுடன் காங்கிரஸ் ஆட்சி அமைத்திருக்கிறது. இதையடுத்து, கர்நாடகாவிலும், டெல்லியில் உள்ள காங்கிரஸ் தலைமையகத்திலும் காங்கிரஸ் கட்சியினர் நடனமாடி தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தி வருகின்றனர்.

கர்நாடக தேர்தலில் ஆளும் பாஜக 224, எதிர்க்கட்சியான காங்கிரஸ் 223 (ஒரு தொகுதி விவசாய சங்கம்), மதச்சார்பற்ற ஜனதா தளம் 207, ஆம் ஆத்மி 217, பகுஜன் சமாஜ் 133 தொகுதிகளில் போட்டியிட்டன. 918 சுயேச்சைகள் உட்பட மொத்தம் 2,613 வேட்பாளர்கள் போட்டியிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



▶ புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தாலுகா, குலமங்கலம் அடுத்த கொப்பரம்பட்டி கிராமத்தில் 100 ஆண்டுகளாக அருள்பாளித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ பத்தினிநாச்சி அம்மன் திருக்கோவில் கும்பாபிஷேகம் இன்று நடைபெற உள்ளது. விழாவிற்கான ஏற்பாடுகளை 56 ஊர் யாதவ சமூகம் திருப்பணிக்குழுவினர் செய்துள்ளனர்.




# கண்ணீர் அஞ்சலி...

**K.K.அன்புச்செல்வன்** B.Sc.,
Ex.மாவட்ட வேளாண் விற்பனைக்குழு தலைவர்

**K.K.செல்லபாண்டியன்** M.Com.,BL.,
மாவட்ட கழகச் செயலாளர்,புதுக்கோட்டை (வ)

**K.K.முருகுபாண்டியன்** B.E.,MBA.,USA
தொழில் அதிபர்,அமெரிக்கா

இவர்களின் தகப்பனார்

# S.கண்ணன் ஆசிரியர் (ஓய்வு)

அவர்கள் 13.05.2023 அன்று இயற்கை எய்தினார் அன்னாரின் இறுதி ஊர்வலம் நல்லடக்கம் 15.05.2023 காலை 10 மணியளவில் கீரனூரில் உள்ள அவர்களது இல்லத்தில் இருந்து நடைபெறும் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*வருத்தத்துடன்...*

## குடும்பத்தினர்கள்

**உறவினர்கள் மற்றும் நண்பர்கள்**
**கீரனூர்**

KTR 9944007372

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்

நம்மை நாம்
கேள்வி கேட்காதவரை..
நம் தவறுகளை
நாம் உணரபோவதில்லை...






# திராவிட நிலப்பரப்பில் இருந்து பா.ஜ.க. முற்றிலுமாக அகற்றப்பட்டுள்ளது

## முதல் அமைச்சர் மு.க ஸ்டாலின் டுவிட்

சென்னை, மே.14–

திராவிட நிலத்தில் இருந்து பாஜக அகற்றப்பட்டுள்ளதாக முதல் அமைச்சர் மு.க ஸ்டாலின் டுவிட்டரில் தெரிவித்துள்ளார், இது தொடர்பாக மு.க ஸ்டாலின் வெளியிட்டுள்ள ட்விட் பதிவில் கூறியிருப்பதாவது, கர்நாடகத்தில் மிகச் சிறப்பான வெற்றியைப் பெற்றுள்ள காங்கிரஸ் கட்சிக்கு எனது வாழ்த்துகள். கர்நாடக மக்கள் வாக்களித்தபோது, நியாயப்படுத்த முடியாத வகையில் சகோதரர் ராகுல் காந்தியை நாடாளுமன்றத்தில் இருந்து பதவிநீக்கம் செய்தது, நாட்டின் முதன்மைப் புலனாய்வு அமைப்புகளை எதிர்க்கட்சிகளுக்கு எதிராகத் தவறாகப் பயன்படுத்தியது, இந்தித் திணிப்பு,பெருமளவிலான ஊழல் என அனைத்தும் அவர்கள் மனதில் எதிரொலித்திருக்கிறது.



பா.ஜ.க.வின் பழிவாங்கும் அரசியலுக்குத்தக்கபாடம் புகட்டி அவர்கள் தங்கள் கன்னடிகப்பெருமிதத்தை நிலைநிறுத்தியுள்ளனர், திராவிட நிலப்பரப்பில் இருந்து பா.ஜ.க. முற்றிலுமாக அகற்றப்பட்டுள்ளது. அடுத்து, 2024 பொதுத்தேர்தலிலும் வெல்ல நாம் அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்றுவோம், இந்தியாவில் மக்களாட்சியையும், அரசியலமைப்பு விழுமியங்களையும் மீட்போம்! " என்று கூறியுள்ளார்.

# பொள்ளாச்சி அருகே குதிரை மீது வைத்திருந்த பேரன்பால் உயிரை மாய்த்து கொண்ட இளைஞர்

பொள்ளாச்சி, மே.14–

குதிரை மீது கொண்ட பேரன்பால் இளைஞர் ஒருவர் தற்கொலை செய்துக்கொண்ட சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

பொள்ளாச்சியை அடுத்த மஞ்சநாயக்கனூர் மேற்கு வீதியைச் சேர்ந்தவர் 54 வயதான பாலசுப்பிரமணியம். இவரது மகன் 24 வயதான மோகன பிரசாத்.மோகன பிரசாத்துக்கு குதிரை மீது அலாதிபிரியம்இருந்ததாக தெரிகிறது. இதனால் அவர் தனது தந்தையிடம் தனக்கென சொந்தமாக ஒரு குதிரை வேண்டும் என கேட்டதாக கூறப்படுகிறது. ஆனால் அவர் குதிரை வாங்கி தர மறுத்துள்ளார்.



இதனால் தந்தை மகன் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.இதில் மனம் விரக்தி அடைந்த மகன் மோகன பிரசாத் வீட்டில் தூக்கிட்டு உள்ளார். பின்பு அவரை மீட்டு அருகில் இருந்த மருத்துவமனைக்கு கொண்டுசென்றுள்ளனர். அங்கு அவரை பரிசோதனை செய்த மருத்துவர்கள் அவர் இறந்து விட்டதாக தெரிவித்துள்ளனர். இதுகுறித்து வழக்கு பதிவு செய்துள்ள ஆழியார் காவல்நிலைய போலீசார் மோகன பிரசாத்தின் உடலை பிரேத பரிசோதனைக்காக அனுப்பிவைத்துள்ளனர்.

# அரியலூர் மாவட்டத்தில் ஊராட்சி கவுன்சிலர்கள் கூட்டம்

அரியலூர், மே.14–

அரியலூர் மாவட்ட ஊராட்சி கவுன்சிலர்கள் கூட்டம் நடைபெற்றது.

அரியலூர் மாவட்ட ஊராட்சி கவுன்சிலர்கள் கூட்டம், மாவட்ட கவுன்சில் கூட்டம் மன்றத்தில், அதன் தலைவர் பொ. சந்திரசேகர் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட ஊராட்சி செயலாளர் கே.சிவக்குமார் முன்னிலையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், ஊராட்சி குழு துணைத் தலைவர் அசோகன் வரவேற்றுப் பேசினார், அலுவலர் வி.சிவக்குமார் மானங்களைப் படித்தார்.

பல்வேறு நிர்வாக செலவினங்கள் மற்றும், 2023–2024–ம் நிதி ஆண்டிற்கு, மாவட்ட ஊராட்சியின் மாநில நிதி குழு நிதியிலிருந்து, வளர்ச்சிப் பணிகளை தேர்வு செய்வதற்கு மன்றம் அங்கீகரித்தல் உட்பட, 13 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இக்கூட்டத்தில் மாவட்ட ஊராட்சி மன்ற அலுவலக இளநிலை உதவியாளர் ரமேஷ், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் அம்பிகா, ராமச்சந்திரன், நல்லமுத்து, குலக்கொடி, வசந்தமணி, சகிலா தேவி, ராஜேந்திரன், அன்பழகன், தனச்செல்வி, கீதா, உள்பட பலர் கலந்து கொண்டனர், முடிவில் மாவட்ட ஊராட்சி செயலாளர் க. சிவகுமார் நன்றி கூறினார்






# சென்னையில் தங்கம் விலை சவரனுக்கு ரூ.80 உயர்வு

சென்னை மே 14

சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை நேற்று சவரனுக்கு ரூ.80 உயர்ந்து, ரூ.45,720–க்கு விற்பனையாகிறது.

சர்வதேச பொருளாதார நிலவரத்துக்கு ஏற்ப இந்தியாவில் தங்கத்தின் விலை அவ்வப்போது உயர்ந்தும், குறைந்தும் வருகிறது. கடந்த வாரத்தில் ஏற்ற இறக்கம் கண்டு வந்த தங்கம் மே.3 ஆம் தேதி அதிரடியாக ரூ.728 உயர்ந்தது. தொடர்ந்து மறுநாள் சவரனுக்கு ரூ.352 அதிகரித்து, ரூ.46,000 என்ற புதிய உச்சத்தை எட்டியது.

இந்தநிலையில், சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை நேற்று கிராமுக்கு ரூ.10 உயர்ந்து ரூ.5,715–க்கு விற்பனையாகிறது. சவரனுக்கு ரூ.80 உயர்ந்து ரூ.45,720–க்கு விற்பனையாகின்றன. 24 காரட் சுத்த தங்கத்தின் விலை 8 கிராம் ரூ.49,472 –க்கு விற்பனை செய்யப்படுகின்றன. இதேபோல், ஒரு கிராம் வெள்ளி ரூ.78.50–க்கு விற்பனையாகிறது. ஒரு கிலோ பார் வெள்ளியின் விலை நேற்று ரூ.78,500– ஆக இருக்கிறது.



## கர்நாடக மாநில பாஜகவுக்கு கிடைத்த தோல்வி அல்ல

# இது பிரதமர் மோடிக்கு கிடைத்த தோல்வி திருநாவுக்கரசர் எம்பி பேட்டி

கறம்பக்குடி, மே.14–

புதுக்கோட்டை மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சியில் பங்கேற்ற திருச்சி பாராளுமன்ற உறுப்பினர் திருநாவுக்கரசர் கறம்பக்குடியில் மறைந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பிரமுகர் ராமதாஸ் இல்லத்தில் நேரில் சென்று அவரது திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி அவரது குடும்பத்திற்கு ஆறுதல் கூறினார்.



பின்பு செய்தியாளர்களை சந்தித்த திருநாவுக்கரசா, கர்நாடகாவில் காங்கிரஸ் வெற்றி குறித்து அவர் கூறும் போது கர்நாடக தேர்தலில் காங்கிரஸ் வெற்றி என்பது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான் இதற்கு காரணம் ஐந்து ஆண்டுகள் ஆட்சியில் இருந்த பிஜேபி தான் மக்களுக்கு எந்த ஒரு நன்மையும் செய்யாமல் ஊழல் அரசாக விளங்கியது. தேர்தல் பிரச்சார நேரங்களில் மக்களிடத்தில் 40% ஊழல் அரசு என்று சொன்னால் மக்களே அதைஏற்று சிரிக்கக்கூடிய அளவிற்கு ஒருமோசமான அரசாங்கத்தை அங்கு நடத்திக் கொண்டிருந்தார்கள், விலைவாசி உயர்வு வேலையில்லா திண்டாட்டம்கொரோனா போன்ற மக்கள் பாதிப்பு உள்ளாகிய சமயங்களில் எந்த நன்மையும் உதவியும் செய்யவில்லை என்ற மனக்குறைவு மேலும் பல்வேறு விதமான கிராமப்புறங்களில் சாலை வசதி,குடிநீர் வசதி போன்றபல்வேறுவிதமான குறைபாடுகள் இருந்தது. இதுவே காங்கிரஸ் வெற்றி பெறுவதற்கு வழிவகை செய்தது. இது கர்நாடக மாநில பிஜேபிக்கு கிடைத்த தோல்வியல்ல பிரதமா மோடி அவர்களுக்கு கிடைத்த தோல்வி என்று கூறினார்.

கறம்பக்குடி அரசு தலைமை மருத்துவமனையில் போதிய மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் பற்றாக்குறையால் பல உயிரிழப்புகள் ஏற்பட்டு வருவதாக பொதுமக்கள் குற்றச்சாட்டு வைத்திருந்தனர்,அதை செய்தியாளர்கள் கேட்ட போது இது சம்பந்தமாக சுகாதாரத்துறை அமைச்சரிடம் கூறி விரைந்து நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் மேலும்காலிபணியிடங்கள் உடனடியாக நிரப்பப்படுவதாகவும் வாக்குறுதி அளித்தார்.



முதலமைச்சர் சென்னையில் ஊராட்சி ஒன்றியக் குழுத்தலைவர்களின் பயன் பாட்டிற்காக புதிய வாகனங்களைக் கொடியசைத்துத் தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து சேலம் கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் கார்மேகம் சேலம் மற்றும் வீரபாண்டி ஆகிய ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்களுக்கு புதிய வாகனங்களை வழங்கினார். உடன், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) பாலச்சந்தர், உதவி ஆட்சியர் (பயிற்சி) சங்கீத் பல்வந்த் வாகி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) சௌ.தமிழரசி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

# திருநெல்வேலி தரிசன மனை பார்வையற்றோர் பள்ளியில் பழைய மாணவர்கள் சங்கத்தின் கூடுகை விழா

திருநெல்வேலி மே 14

திருநெல்வேலி மாவட்டம் - பாளையங்கோட்டையில் உள்ள தரிசன மனை பார்வையற்றோர் பள்ளியில் பழைய மாணவர்கள் சங்கத்தின் கூடுகை விழா நடைபெற்றது, தலைமை தமிழக சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு, ராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர்கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார்.

இந்நிகழ்ச்சி பார்வைத் திறன் குறையுடையோர் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில்நடைபெற்றது. இப்பள்ளியில் பயின்ற முன்னாள்மாணவர்கள் பாளையங்கோட்டையில் ஊனமுற்றோர்கல்லூரியும், பள்ளி வளாகத்தில் கலையரங்கமும், ஊனமுற்றோருக்குவேலை வாய்ப்பு தரவேண்டியும் தமிழக சட்டப்பேரவைத் தலைவரிடம் கோரிக்கையை முன் வைத்தனர்.



அதை தமிழக முதலமைச்சரிடம் ஆலோசித்து நிறைவேற்றித் தருவதாக உறுதியளித்தார், இந்நிகழ்ச்சியில் மு.சங்கர் மாதிமுக மாவட்ட இளைஞரணி செயலாளர் பணகுடி, அப்துல் வஹாப் சட்டமன்ற உறுப்பினர் பாளையங்கோட்டை, பி.எம் சரவணன் திருநெல்வேலி மாநகராட்சி மேயர், விஜிலா சத்யானந்த் முன்னாள் மேயர், முன்னாள் எம்பி திருநெல்வேலி கே. சாமுவேல் பார்கர் ராஜ், இந்நிகழ்ச்சியில் அனைவரையும் வரவேற்றார் உ..அப்பாதுரை மேல்நிலைப்பள்ளி ஆசிரியர் பணகுடி, பரமசிவன், கனகராஜ் மாவட்ட கவுன்சிலர் சித்திக்,களக்காடு நகராட்சி துணைத்தலைவர் பி.சி. ராஜன் ஆகியோர் கலந்துகொண்டார்கள். இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் அறுசுவை மதிய உணவு சபாநாயகர் மு.அப்பாவு ஏற்பாடு செய்து கொடுத்தார், ஊனமுற்றோருக்கு பரிசுகளும் வழங்கினார்கள்.

# சென்னை உட்பட 4 மாவட்டங்களில் மேலும் 320 பள்ளிகளில் காலை சிற்றுண்டித் திட்ட இணைப்பு : அதிகாரிகள் தகவல்

சென்னை மே 14

காலை சிற்றுண்டித் திட்டத்தில் சென்னை உட்பட 4 மாவட்டங்களில் 320 பள்ளிகள் புதிதாக இணைக்கப்பட உள்ளன. இதன் வாயிலாக, 357 பள்ளிகளில் காலை சிற்றுண்டி திட்டம் அமல்படுத்தப்பட உள்ளது. அதில், 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பயன்பெற உள்ளதாக சென்னை மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழகத்தில், அரசுப் பள்ளிகளில் படிக்கும் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு ஏற்படும் சத்துணவு குறைப்பாட்டை போக்கவும், அவர்கள் காலை உணவை உட்கொள்ளும் வகையில் காலை சிற்றுண்டித் திட்டம், கடந்தாண்டு துவங்கப்பட்டது. முதற்கட்டமாக, சென்னை, மதுரை போன்ற சில மாவட்டங்களில் இத்திட்டம் செயல்பாட்டுக்கு வந்தது. இதைதொடர்ந்து, 500 கோடி ரூபாய் மதிப்பில், அனைத்து அரசு பள்ளிகளுக்கும் விரிவுப்படுத்தப்படும் என, கடந்த தமிழக பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது. இதில், மாநிலம் முழுதும் 18 லட்சம் மாணவர்கள் பயன்பெற உள்ளனர்.

சென்னை மாநகராட்சியில், திருவொற்றியூர், மாதவரம், தண்டையார்பேட்டை, ராயபுரம் ஆகிய நான்கு மண்டலங்களில் முதற்கட்டமாக 37 பள்ளிகளில் காலை சிற்றுண்டி திட்டம் துவங்கப்பட்டது. இதில், 5,148 மாணவர்கள் பயன்பெற்று வருகின்றார்கள். இவர்களுக்கு, எண்ணூரில் இரண்டு; மாதவரம், கொடுங்கையூர், கொருக்குப்பேட்டை, ராயபுரம் ஆகிய ஆறு இடங்களில் ஒருங்கிணைந்த சமையல் கூடம் அமைக்கப்பட்டு உணவு தயாரித்து விநியோகிக்கப்படுகிறது. இத்திட்டம் பெற்றோர் மற்றும் மாணவர்களிடத்தில் வரவேற்பை பெற்றுள்ள நிலையில், இவற்றை அனைத்து தொடக்க பள்ளிகளிலும் விரிவுப்படுத்த மாநகராட்சி நடவடிக்கை எடுத்து வருகிறது.



இதுகுறித்து, சென்னை மாநகராட்சி அதிகாரிகள் கூறியதாவது: "பசியோடு பள்ளிக்கு மாணவர்கள் வருவதால், ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்படுகின்றனர். இதனால், மாணவர்களுக்கு ஊட்டச்சத்தை அதிகரித்தல், பள்ளிக்கு வருவதை அதிகரித்தல், தாய்மார்களின் பணிச்சுமையை குறைத்தல் உள்ளிட்ட காரணங்களுக்காக காலை சிற்றுண்டித் திட்டம் துவங்கப்பட்டது.

இத்திட்டம், சென்னையில் தற்போது 37 பள்ளிகளில் செயல்படுத்தப்படுகிறது. அதேநேரம், திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் இருந்து 139 பள்ளிகள் சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் கீழ் இணைக்கப்பட்டுள்ளது. இதில், பெரும்பாலானவை தொடக்க பள்ளிகளாக உள்ளன. இதில் படிக்கும் மாணவர்கள் மற்றும் மாநகராட்சியில் ஏற்கனெவே உள்ள பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் காலை சிற்றுண்டித் திட்டம் விரிவாக்கப்பட உள்ளது.

அதன்படி, 320 பள்ளிகள் புதிதாக இத்திட்டத்தில் இணைக்கப்பட உள்ளன. இதன் வாயிலாக, 357 பள்ளிகளில் காலை சிற்றுண்டி திட்டம் அமல்படுத்தப்பட உள்ளது. அதில், 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பயன்பெற உள்ளனர். இதற்கான, பொது சமையல் கூடங்கள் அமைப்பதற்கான இடங்களை தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. அதேபோல், எவ்வளவு மாணவர்கள் பயன்பெற உள்ளனர் போன்ற விபரங்களும், அதற்கான செலவினங்களும் ஆராயப்பட்டு வருகின்றனர். விரைவில், இப்பள்ளிகளில் காலை சிற்றுண்டி திட்டம் விரிவுப்படுத்தப்படும்". இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

வழங்கப்படும் உணவு விபரம்

திங்கள் அரிசி, கோதுமை ரவா, சேமியா ஆகிய ஒன்றுடன் காய்கறி சாம்பார்

செவ்வாய் ரவா, சேமியா, சோள, கோதுமை ஆகியவற்றில் ஒரு காய்கறி கிச்சடி

புதன் ரவா பொங்கல் அல்லது வெண் பொங்கல் காய்கறி சாம்பார்

வியாழன் உப்புமா வகை உணவு

வெள்ளி கிச்சடி ரவா கேசரி அல்லது சேமியா கேசரி

## கர்நாடகா தேர்தல் வெற்றி

# தென்காசியில் காங்கிரஸார் இனிப்பு வழங்கி கொண்டாட்டம்

தென்காசி மே 14

கர்நாடகா தேர்தலில் காங்கிரஸ் கட்சி அமோக வெற்றி பெற்றதை முன்னிட்டு தென்காசி மாவட்டத் தலைவரும், தென்காசி சட்டமன்ற உறுப்பினருமான எஸ். பழனி நாடார், மற்றும் தென்காசி நகர தலைவர் மாடசாமி ஜோதிடர் ஆகியோர் ஆலோசனையின் பேரில் காங்கிரஸார் கீழரத வீதியில் உள்ள காந்தியின் சிலைக்கு மாலை அணிவித்தும், பட்டாசுகள் வெடித்தும், இனிப்புகள் வழங்கியும் கொண்டாடினர். இந்நிகழ்ச்சிக்கு மருத்துவர் சங்கர குமார் தலைமை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட பஞ்சாயத்து துணைத் தலைவர் உதய கிருஷ்ணன், மாவட்ட பொதுச்செயலாளர்கள் ஏஜிஎம் கணேசன், காஜா மைதீன், மாநில பொதுக்குழு உறுப்பினர் ஜேம்ஸ், இளைஞர் காங்கிரஸ் சந்தோஷ், நகர பொருளாளர் ஈஸ்வரன், மாவட்ட செயலாளர்கள் கோவிந்தராஜுலு, கண்ணன், சபரி முருகேசன், லட்சுமணன், ஏஎல்என் ஆறுமுகம், சிறுபான்மை பிரிவு ஹலால் சலீம், கவுன்சிலர்கள் சுப்பிரமணியன், ரபிக், நகர துணைத் தலைவர் தேவராஜன், நகர பொது செயலாளர் பீர் முகமது, பிரேம்குமார், உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டார்கள்.



தென்காசி மவுண்ட் ரோடு ஆட்டோ ஸ்டாண்ட்டில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு காங்கிரஸ் சிறுபான்மை பிரிவு நகர தலைவர் ஹலால் சலீம் தலைமை வகித்தார். மருத்துவர் சங்கர குமார், மாவட்ட பொதுச்செயலாளர்கள் கணேசன், காஜாமைதீன், ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்ச்சியில் நகர பொருளாளர் ஈஸ்வரன், மாவட்ட செயலாளர்கள் கண்ணன், சபரி முருகேசன், லட்சுமணன், தேவராஜன், உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டார்கள். முடிவில் மாவட்ட பொதுச் செயலாளர் ஏஜிஎம். கணேசன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

14.05.2023 ❖ வரலாறு

# குடும்ப அட்டை குறித்த பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் சிறப்பு முகாம்

திருவள்ளூர், மே, 14 -

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், ஆரணியில் குடும்ப அட்டையில் பெயர் சேர்த்தல், நீக்கல், புதிய குடும்ப அட்டைக்கு விண்ணப்பித்தல், நகல் அட்டை பெறுதல் உள்ளிட்டவை களுக்கான சிறப்பு முகாம் நேற்று நடைபெற்றது.



இதில் பொது மக்களிடமிருந்து இருந்து பல்வேறு வகையான கோரிக்கை மனுக்களை பொன்னேரி வட்ட வழங்கல் அலுவலர் ஜெய்கர் பெற்றுக்கொண்டார். இந்நிகழ்ச்சியில் ஆரணி பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் வழக்கறிஞர் க.சுகுமார், வருவாய் ஆய்வாளர் அபிராமி, கிராம நிர்வாக அதிகாரிகள் பாரதி, இர்பான் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# அமைச்சர் பொன்முடியுடன் பேச்சுவார்த்தை ஆசிரியர்களின் உண்ணாவிரதப் போராட்டம் வாபஸ்

சென்னை , மே, 14 -

தமிழக பள்ளிக் கல்வித் துறையில் அரசு பள்ளி ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் நியமனத்திற்கான வயது வரம்பு 57 ஆகவும், ஓய்வு பெறும் வயது 58 ஆகவும் இருந்தது. பின்னர் 2019ல் பணியாளர்களின் ஓய்வுக்கான வயது வரம்பு 60 ஆக அதிகரிக்கப்பட்டது. அதேசமயம் பணி நியமனத்திற்கான உச்ச வரம்பு 40 வயதாக குறைக்கப்பட்டது. இதனால் அதிர்ச்சியடைந்த, 40 வயதைக் கடந்த பி.எட் பட்டதாரிகள் வயது வரம்பை தளர்த்தக்கோரி போராட்டங்களில் ஈடுபட்டனர்.



இதைத்தொடர்ந்து 2022ல் பொதுப் பிரிவினருக்கு வயது உச்ச வரம்பு 45 ஆகவும், இதர பிரிவினருக்கு 50 ஆகவும் உயர்த்தப்பட்டது. இந்நிலையில், டெட் தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு அரசு ஆசிரியர் பணி வழங்க வேண்டும், ஆசிரியர் நியமனத்திற்கான வயது உச்சவரம்பை 57 வயதாக உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்ற நலச்சங்கம் சார்பில் சென்னை பள்ளிக் கல்வித்துறை வளாகத்தில் கடந்த மே 9-ம் தேதி முதல் ஆசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும் திமுக தேர்தல் வாக்குறுதியில் கூறப்பட்டிருந்ததைப் போல அனைவருக்கும் பணி வழங்க வேண்டும் என்ற கோரிக்கையைக் கப்பட்டது. இந்த போராட்டத்திற்கு, பாமக, நாம்தமிழர், பாஜக உள்ளிட்ட கட்சிகள் தங்களது ஆதரவை தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில், நேற்று இந்த போராட்ட களத்திற்கு சென்ற உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடி, அவர்களிடம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். அப்போது, முதலமைச்சரின் கவனத்திற்கு ஆசிரியர்களின் கோரிக்கைகள் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும், விரைவில் நல்ல முடிவு கிடைக்கும் என்றும் அமைச்சர் உத்தரவாதம் கொடுத்தார். இதையடுத்து ஆசிரியர்களின் போராட்டம் முடிவிற்கு வந்தது.

# எடப்பாடி பழனிச்சாமி பிறந்த நாள் விழாவில் 1069 பேருக்கு நல திட்ட உதவிகள்

## மாவட்ட செயலாளர் ஆர்.எஸ்.ராஜேஷ் வழங்கினார்

சென்னை, மே, 14 -

சென்னை, ஆர்.கே.நகரில் முன்னாள் முதல்வர்கள் எம்ஜிஆர், ஜெயலலிதாவிற்கு பிறகு முதல் முறையாக எடப்பாடி பழனிச்சாமி பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது.



அதிமுக பொதுச் செயலாளரும், தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமியின் 69 வது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை கொருக்குப்பேட்டை எழில் நகர் பகுதியில் நடைபெற்ற விழாவில் 1069 பெண்களுக்கு பிளாஸ்டிக்பக்கெட்டில் இனி எல்லாம் ஜெயமே என்று ஸ்டிக்கர் ஒட்டிய தலா ஐந்து கிலோ சர்க்கரை, மற்றும் பெண்களுக்கு தையல் இயந்திரம், மீன்பாடி ரிக்ஷா, தள்ளுவண்டி உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வட சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் ஆர்.எஸ். ராஜேஷ் வழங்கினார்.

## வீடு தீப்பிடித்து எரிந்ததில்

# அறுவை சிகிச்சைக்காக வைத்திருந்த பணம் உள்ளிட்ட ரூ.5 லட்சம் மதிப்பிலான பொருட்கள் சேதம்

காரைக்கால், மே, 14 -

காரைக்கால் மாவட்டம், நேரு நகர் பகுதியில் அமைந்துள்ள டோபிகாலனி தெருவில் நேற்று மாலை சரவணன் என்பவரது குடிசை வீடு திடீரென தீப்பிடித்து எரிந்தது. வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த இரண்டு வயது குழந்தையுடன் தாய் வெளியே ஓடி வந்து விட்டார். ஆனால் வீடு மட மடவென தீப்பிடித்து எரிந்துள்ளது.



இதை அடுத்து அருகில் உள்ளவர்கள் தண்ணீரைக் கொண்டு தீயை அணைக்க முயன்றனர். ஆனால் தீயை கட்டுப்படுத்த முடியவில்லை.உடனடியாக தீயணைப்புதுறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு தீயணைப்பு வீரர்கள் தீயினை கட்டுப்படுத்த முயன்றனர். ஆனால் அதற்குள்ளாக வீடு முழுவதும்தீக்கிரையானது. தீயணைப்பு வீரர்கள் விரைவாகசெயல்பட்டுமற்ற வீடுகளில் தீ பரவாதவாறு கட்டுப்படுத்தினர்.

முதற்கட்ட விசாரணையில் மின் கசிவு காரணமாக வீடு தீப்பிடித்திருக்கலாம் என கூறப்படுகிறது. சரவணனின் தாய் வாசுகியின் இருதய அறுவை சிகிச்சைக்காக வீட்டில் வைத்திருந்த ரூபாய் ஒரு லட்சத்து 50 ஆயிரம் பணம் உள்ளிட்ட பீரோ, கட்டில், டிவி, பிரிட்ஜ் உள்ளிட்ட ரூ.5 லட்சம் மதிப்பிலான வீட்டு உபயோகப் பொருட்கள் தீக்கிரையானது.

காரைக்கால் நகர போலீசார் இந்த சம்பவம் குறித்துவழக்குபதிவுசெய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். பகல் நேரம் என்பதால் உயிரிழப்புக்கள் ஏதுமில்லை.



▶ புதுச்சேரி குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக காரைக்கால் ஆற்றங்கரை பேட் பகுதியில் கழிவு நீர் வாய்க்காலுடன் கூடிய சிமெண்ட் சாலை மற்றும் தார் சாலை அமைத்து மேம்படுத்துவதற்கு ரூபாய் 26,86,950/- இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்வதற்கான பூமி பூஜை நேற்று சனிக்கிழமை காலை நடைபெற்றது. நிரவி - திருப்பட்டினம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நாகதியாகராஜன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் குடிசை மாற்று வாரிய உதவி பொறியாளர் எஸ்.சுதர்சனன், இளநிலை பொறியாளர் ஆர்.கோபிநாதன், மேலும் முக்கிய பிரமுகர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



▶ புதுவை ஜிப்மர் மருத்துவமனையில் இருந்து சிறப்பு மருத்துவர்கள் குழுவானது மாதம் இரண்டு சனிக்கிழமைகளில் காரைக்கால் வருகை புரிந்து காரைக்கால் அரசு பொது மருத்துவமனையில் பொதுமக்களுக்கு சிகிச்சை மற்றும் ஆலோசனைகளை வழங்கி வருகிறது. நேற்று சனிக்கிழமை காலை 10.00 மணி முதல் நண்பகல் 01.00 மணி வரை நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் எலும்பு சம்பந்தமான பிரச்சினைகள் குறித்து சிறப்பு மருத்துவ நிபுணர்கள் வருகை புரிந்து சிகிச்சை மற்றும் ஆலோசனைகளை வழங்கினார்கள். இதில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு பயன் பெற்றார்கள்.



▶ கர்நாடகா சட்டமன்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சி பெற்ற வெற்றியை கொண்டாடும் வகையில், சென்னை திருவொற்றியூரில் காங்கிரஸ் கட்சி அமைப்பு சாரா அணி மாவட்ட தலைவர் கலையரசன் தலைமையில், திருவொற்றியூர் சன்னதி தெருவில் உள்ள காங்கிரஸ் அலுவலகம் முன்பு கோஷங்கள் எழுப்பி ஊர்வலமாக தேரடி பகுதியில் பட்டாசு வெடித்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடினர்.



▶ தென்காசி மாவட்டம்- சங்கரன்கோவிலில் தென்காசி வடக்கு மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளராக சங்கரன்கோவில் தாலுகா குருக்கள்பட்டியைச் சேர்ந்த புளியங்குடி நகர்மன்ற உறுப்பினர் பொண்ணு துரைச்சியை நியமனம் செய்த தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலினுக்கும், தென்காசி வடக்கு மாவட்ட செயலாளரும், எம்எல்ஏவுமான ஈ.ராஜா ஈஸ்வரனுக்கும், நன்றியை தெரிவித்துக் கொண்டு ராஜாவுக்கு சால்வை அணிவித்து வாழ்த்துக்களைப் பெற்றனர். இந்நிகழ்ச்சியில் புளியங்குடி நகர அவைத் தலைவர், தலைமை செயற்குழு உறுப்பினர், வேலுச்சாமி பாண்டியன், புளியங்குடி முன்னாள் சேர்மன் வெங்கட்ராம ஐயர், நகர துணைச் செயலாளர் காந்திமதியம்மாள், அருணாச்சலம், விஜயலட்சுமி ஆகியோர் கலந்துகொண்டு மாவட்டச் செயலாளரிடம் நன்றிகளை தெரிவித்து கொண்டு வாழ்த்து பெற்றனர்.



▶ எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்ற நோக்கில் தமிழ் மொழியின் சிறப்புகளை உலகம் அறிய செய்ய வேண்டும் என்ற நோக்கில் நம் தமிழக அரசு ஒவ்வொரு பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் மற்றும் அரசு அலுவலகங்களில் தமிழ் மொழிக்கு சிறப்பு சேர்க்கும் விதமாக பொதுவான மக்கள் கூடும் இடங்களில் தினமும் ஒரு திருக்குறளை அதன் பொருளோடு எழுத வேண்டும் என்றும் மேலும் ஒரு ஆங்கில சொல்லுக்கு இணையான தமிழ் சொல் எழுத வேண்டும் என்றும் உத்தரவு பிறப்பித்துள்ளது.அதன் அடிப்படையில் கல்லூரி முதல்வர் அறிவுறுத்தலுக்கிணங்க புதுக்கோட்டை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை அலுவலக நுழைவு வாயிலில் கரும்பலகை வைத்து தினமும் ஒரு திருக்குறள் அதன் விளக்கத்தையும் மருந்துவர் கே . சரவணன் எழுதி மருத்துவமனை பணியாளர்களுக்கு திருக்குறள் பற்றிய விளக்கமும் அளித்தார்.

# தமிழகத்தில் மூத்த ஐஏஎஸ் அதிகாரிகள் பணியிடமாற்றம் நிதித்துறை செயலராக உதயச்சந்திரன் நியமனம்

சென்னை , மே.14-

12 மூத்த ஐஏஎஸ் அதிகாரிகளை பணியிட மாற்றம் செய்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. முதல்வரின் முதன்மைச் செயலாளராக இருந்த ஐஏஎஸ் அதிகாரி உதயச்சந்திரன், நிதித்துறைசெயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.



இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்தியில் கூறியிருப்பதாவது :- நிதித்துறைசெயலாளராக இருந்த ஐஏஎஸ் அதிகாரி முருகானந்தம், முதல்வரின் முதன்மைச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். முதல்வரின் முதன்மைச் செயலாளராக இருந்த ஐஏஎஸ் அதிகாரி உதயச்சந்திரன், நிதித்துறைசெயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஊரகவளர்ச்சித்துறை செயலாளராக இருந்த ஐஏஎஸ் அதிகாரி அமுதா, உள்துறை செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். உள்துறை செயலாளராக இருந்த ஐஏஎஸ் அதிகாரி பணீந்தர ரெட்டி போக்குவரத்து துறை கூடுதல் முதன்மைச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

போக்குவரத்து துறை கூடுதல் முதன்மைச் செயலாளராக இருந்த ஐஏஎஸ் அதிகாரி கே.கோபால் லஞ்ச ஒழிப்புத்துறை கூடுதல் முதன்மை செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையராக இருந்த ஐஏஎஸ் அதிகாரி ககன்தீப் சிங் பேடி சுகாதாரத்துறை முதன்மைச்செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கூட்டுறவுத்துறை முதன்மைச் செயலாளர் ஜெ.ராதாகிருஷ்ணன் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சுகாதாரத்துறை முதன்மைச்செயலாளராக இருந்த ஐஏஎஸ் அதிகாரி செந்தில்குமார் ஊரக வளர்ச்சித்துறை செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். பொதுப்பணித்துறை முதன்மை செயலாளராக இருந்த ஐஏஎஸ் அதிகாரி மணிவாசன், சுற்றுலாத்துறை முதன்மை செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சுற்றுலாத்துறை முதன்மைச்செயலாளராக இருந்த ஐஏஎஸ் அதிகாரி சந்திரமோகன், பொதுப்பணித்துறை முதன்மை செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். மறுவாழ்வு துறை செயலாளராக இருந்த ஐஏஎஸ்அதிகாரிஜெகநாதன் கூட்டுறவுத்துறை முதன்மைச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பள்ளிக் கல்வித்துறை ஆணையராக இருந்த ஐஏஎஸ் அதிகாரி நந்தகுமார் மனிதவள மேம்பாட்டுத்துறை செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். மனிதவள மேம்பாட்டுத்துறை செயலாளராக இருந்த ஐஏஎஸ் அதிகாரி மைதிலி கே.ராஜேந்திரன் இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி ஆணையராக இருந்த ஐஏஎஸ் அதிகாரி கணேஷ் பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## திருச்சிற்றம்பலம் ஊராட்சியில் ரூ.1 கோடியே 30 லட்சம் மதிப்பில்

# பல்வேறு திட்ட பணிகளை தென்காசி எம்.எல்.ஏ பழனி நாடார் துவக்கி வைத்தார்

தென்காசி, மே. 14-

தென்காசி மாவட்டம் சுரண்டை அருகே உள்ள திருச் சிற்றம்பலம் ஊராட்சியில் ரூ. 19.33 லட்சம் செலவில் முடிவுற்ற பணிகளையும், சுமார் 1 கோடி செலவில் நடை பெறவுள்ள பணிகளையும் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் பழனி நாடார் மற்றும் தி.மு.க தெற்கு மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் சிவபத்மநாதன் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.



தென்காசி மாவட்டம் திருச்சிற்றம்பலம் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சட்டமன்ற உறுப்பினரின் பொது நிதி, மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் நிதி, ஆதிதிராவிடர் பகுதி வளர்ச்சி நிதி, உள்ளிட்ட நிதிகளில் ரூ.1 கோடியே 30 லட்சம் செலவில் வாறுகால் அமைத்தல், சுகாதாரவளாககட்டிடம், பாலம் அமைத்தல் மயான தண்ணீர் தொட்டி அமைத்தல், அங்கன்வாடி கட்டிடம், நியாய விலைக்கடை என 18 பணிகள் தொடங்கும் விழா நடைபெற்றது.

இதில் ரூ 19.33 லட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்ட நியாய விலைக்கடை மற்றும் சுகாதார வளாகம் திறப்பு விழாவும் நடைபெற்றது. இதர பணிகளை அடிக்கல் நாட்டி தொடங்கி வைக்கப்பட்டது. இவ்விழாவில் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் எஸ். பழனி நாடார், தி.மு.க தெற்கு மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் சிவபத்மநாதன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு அடிக்கல் நாட்டினர்,

மேலும் இவ்விழாவில் தென்காசி ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர் ஷேக் அப்துல்லா, ஒன்றிய துணைத் தலைவர் கனகராஜ் முத்து பாண்டியன், தென்காசி மாவட்ட பஞ்சாயத்து துணைத் தலைவர் உதய கிருஷ்ணன், தமிழ்ச்செல்வி, ஒன்றிய செயலாளர் ரவிசங்கர், சுரண்டை நகர திமுக செயலாளர் ஜெயபாலன், சுரண்டை காங்கிரஸ் நகரத் தலைவர் ஜெயபால், காங்கிரஸ் பேச்சாளர் பால் துரை உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# வடவாளம் மிராஸ் மெய்யப்பன் பாண்டுரார் காலமானார்

புதுக்கோட்டை , மே.14-

புதுக்கோட்டை ஒன்றியம் வடவாளம் மிராஸ் மெய்யப்பன் பாண்டுரார் திடீர் உடல்நல குறைவால் நேற்று காலமானார்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் சமூக நலன் சார்ந்த சிந்தனையால் அனைவரையும் அரவணைத்து செல்வதில் தனக்கு நிகர்தானே என்று முத்திரை பதித்த பெரியவர். வடவாளம் மிராஸ்,18 பட்டி



ஊர் அம்பலம் பெரியவர் மெய்யப்பன் பாண்டுரார் திடீர் உடல் நலக்குறைவு காரணமாக நேற்று காலமானார். அவரது இறுதிச் சடங்கு நல்லடக்கம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் வடவாளம் பிலாவிடுதி அவரது இல்லத்தில் இருந்து நடைபெற உள்ளது. பெரியவர் மெய்யப்பன் பாண்டுரார் வடவாளம் அரசு மேல்நிலைப் பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழக தலைவராக திறம்பட பணியாற்றியவர் அவரது மறைவால் அப்பகுதி மக்கள் மிகுந்த சோகத்தில் உள்ளனர்.

# ஆபத்தை ஏற்படுத்த காத்திருக்கும் மின் கம்பங்கள்



▶ புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே உள்ள நாகுடி துணை மின் நிலையத்திலிருந்து மன்னகுடி ஊராட்சி வயல் வழிப்பகுதியில் சாய்ந்த நிலையில் மிகுந்த ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில், மின்கம்பங்கள் உள்ளன. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய கள ஆய்வு செய்து ஆபத்து ஏற்படும் முன்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

# பயிர் பாதிப்புக்கு உரிய இழப்பீடு வழங்க சிபிஎம் வலியுறுத்தல்

புதுக்கோட்டை, மே.14-

வறட்சியினால் பாதிக்கப்பட்ட நெல்பயிர்களுக்கு தாமதமின்றி இழப்பீடு வழங்க வேண்டுமென மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தி உள்ளது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் புதுக்கோட்டை மாவட்டக்குழுக் கூட்டம், மாவட்ட செயற்குழு உறுப்பினர் சு.மதியழகன் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. மாநிலக்குழு முடிவுகளை விளக்கி மாநிலக்குழு உறுப்பினர் ஐ.வி.நாகராஜன் பேசினார். மாநிலக்குழு உறுப்பினர் எம்.சின்னதுரை ,மாவட்டச் செயலாளர் எஸ்.கவிவர்மன் மற்றும் செயற்குழு மாவட்டக்குழு உறுப்பினர்கள் பங்கேற்றார்கள். கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் கடும் வறட்சியினால் சாகுபடிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. இதில் நெல் விவசாயிகள் அதிகமாகப் பாதிக்கப்பட்டனர். குறிப்பாக ஆவுடையார்கோவில் தாலுகாவில் 2826 ஹெக்டேர், மணமேல்குடி தாலுகாவில் 1786 ஹெக்டேர், அறந்தாங்கி தாலுகாவில் 517 ஹெக்டேர் அளவுக்கு நெல்பயிர்கள் கடும் வறட்சியினால் பாதிப்புக்கு உள்ளானது.பயிர்ப்பாதிப்புகளை அதிகாரிகள் கணக்கீடு செய்துவிட்டனர். மாவட்ட நிர்வாகத்தின்சார்பில் இதுகுறித்து மாநில அரசுக்கும் அறிக்கை அனுப்பப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

ஆனாலும், இதுவரை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு கிடைக்கவில்லை. இதனால் விவசாயிகள் கடுமையான சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர். எனவே, விவசாயிகளின் பயிர் பாதிப்புக்கு ஏற்ப உரிய இழப்பீட்டை தமிழக அரசு உடனடியாக வழங்க வேண்டும். இவ்வாறு அந்த தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

வ ரு ந் து கி றோ ம்



புதுக்கோட்டை மாவட்டம், முத்துப்பட்டினம் கிராமம்
காலம்சென்ற பெரி.சண்முகம் அம்பலகாரர்
அவர்களின் மனைவியும்
தொழிலதிபர் திரு.S.ராமச்சந்திரன் (SR)
அவர்களின் தாயாருமான
திருமதி.S.முத்தாத்தாள் அம்மாள்
அவர்களை இழந்து வாடும்
குடும்பத்தாருக்கு
எங்கள் ஆழ்ந்த இரங்கலை
தெரிவித்துக்கொள்கிறோம்.
அம்மையாரின் ஆன்மா சாந்தி அடைய
இறைவனை பிராத்திகின்றோம்...
வருத்தத்துடன்...
S.நடராஜன் மற்றும் குடும்பத்தினர்கள்
ஸ்ரீ புவனேஸ்வரி தங்கமாளிகை,
புதுக்கோட்டை.

கர்நாடகத்தில் காங்கிரஸ் கட்சி அதிக இடங்களில் முன்னணி பெற்றதையொட்டி

# திருமயத்தில் காங்கிரஸ் கட்சியினர் வெடி வெடித்து இனிப்புகள் வழங்கி கொண்டாட்டம்



திருமயம்,மே.14-

புதுக்கோட்டை மாவட்டம் திருமயத்தில் கர்நாடக மாநிலத்தில் இந்திய தேசிய காங்கிரஸ் அதிக இடங்களில் முன்னிலை வகித்து கொண்டிருக்கிறது இதில் திருமயம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் தெற்கு மாவட்ட காங்கிரஸ் கட்சியின் தலைவருமான ராமசுப்புராம் தலைமையில் திருமயம் கடைவீதியில் வெடி வெடித்து இனிப்புகள் வழங்கி மகிழ்ச்சியை கொண்டாடினர்.

மேலும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினுடைய மாநில சிறுபான்மை பிரிவு அமைப்பாளர் அக்பர் அலி வட்டாரத் தலைவர்கள் தெற்கு வட்டாரத் தலைவர் மணிகண்டன், முன்னாள் வட்டார தலைவர்கள் ,முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர்கள் தற்போது உள்ள ஊராட்சி மன்றத் தலைவர், ஒன்றிய கவுன்சிலர் கணேஷ் சுப்புராம், நகரத் தலைவர் மற்றும் காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய தொண்டர்கள் அனைவரும் சிறப்பாக கலந்து கொண்டு விமர்சையாக கொண்டாடினர்.



.கர்நாடகா தேர்தலில் தனிப்பெரும்பான்மை பெற்று சாதனை படைத்த காங்கிரஸ் கட்சி 124 இடங்களை பிடித்து ஆட்சியைப் பிடித்தது. இதைக் கொண்டாடும் வகையில் மதுரை சொக்கலிங்க நகரில் உள்ள காங்கிரஸ் கட்சிக்காரர்கள், மாநில பொதுக்குழு உறுப்பினர் மணிமாறன் தலைமையில் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். உடன் நகர பொதுச் செயலாளர் மகாராஜன், மூவேந்தர், வார்டு சர்கில் தலைவர் விக்னேஸ்வரன், மாவட்ட இளைஞர் அணி துணைத் தலைவர் கோவிந்தராஜ், கந்தவேல், குமாரவேல் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# அன்னவாசல் ஊராட்சியில் மக்கள் குறைதீர் முகாம்

தரங்கம்பாடி, மே 13 -

மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோவில் அருகே அன்னவாசல் ஊராட்சியில் உணவுப் பொருள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு துறை மற்றும் தரங்கம்பாடி தாலுகா வட்ட வழங்கல் துறை சார்பில் மக்கள் குறைதீர் முகாம் நடைபெற்றது.

முகாமுக்கு வட்ட வழங்கல் அலுவலர் விஜயகுமார் தலைமை வகித்தார். ஊராட்சி மன்ற தலைவர் உஷா பொன்னி வளவன், துணைத்தலைவர் பாரதி கண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வட்ட வழங்கல் துறை வருவாய் அலுவலர் மரிய ஜோசப் ராஜ் வரவேற்றார்.



இதில் ரேஷன் கார்டு பெயர் மாற்றம், பிழை திருத்தம், முகவரி மாற்றம், செல்போன் எண் மாற்றம் உள்ளிட்டவை தொடர்பாக ஏராளமான மனுக்கள் பெறப்பட்டது. இதில் ஒரு சில மனுக்கள் தவிர மற்ற மனுக்களுக்கு உடனடி தீர்வு காணப்பட்டது. முகாமில் தரங்கம்பாடி வட்ட வழங்கல் கண்காணிப்பு குழு உறுப்பினர் சகாயராஜ் மற்றும் வார்டு உறுப்பினர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.



புதுக்கோட்டை 9ஏ நத்தம்பண்ணை ஊராட்சி பாலன்நகரில் மாவட்ட சித்தமருத்துவம் மற்றும் ஆயுர்வேத மருத்துவ குழுவினர் நடத்திய முகாமினை திருச்சிராப்பள்ளி பாராளுமன்ற உறுப்பினர் சு.திருநாவுக்கரசர் துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சிக்கு புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா முன்னாள் நகர்மன்ற தலைவர் துரை திவியநாதன், மாவட்ட வளர்ச்சி மற்றும் கண்காணிப்பு குழு உறுப்பினர் முருகேசன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் மு.க.ராமகிருஸ்ணன் ஊராட்சி மன்ற தலைவர் பாபு,ஒன்றிய கவுன்சிலர் சிவயோக மலர், ரெங்கசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதற்கான ஒருங்கிணைப்பு சூர்யா பழனியப்பன் செய்தார். முகாமில் 300 மேற்பட்ட மக்கள் சிகிச்சை பெற்றனர்.

# புதுக்கோட்டை வடக்கு ராஜ வீதியில் உள்ள நடராஜ பெருமாளுக்கு சிறப்பு வழிபாடு நடந்தது

புதுக்கோட்டை மே 14-

புதுக்கோட்டை வடக்கு ராஜ வீதியில் உள்ள சுந்தரம் அடிகளார் இல்லத்தில் நடராஜ பெருமானுக்கு சிறப்பு வழிபாடு நடைபெற்றது. சித்திரை மாதம் திருவோண நட்சத்திரத்தில் , நடராஜர் மற்றும் சிவகாமி அம்மனுக்கு அபிஷேகம் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும் அதன் படி,உற்சவர் நடராஜர் மற்றும் சிவகாமி அம்மனுக்கு மஞ்சள் பொடி, மாப்பொடி, திரவியப் பொடி, வில்வப் பொடி,பால், தயிர், சந்தனம், தேன், இளநீர், கரும்புச்சாறு உள்ளிட்ட பல்வேறு திரவியங்களை கொண்டு சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது.



பின்னர் நடராஜ பெருமான், சிவகாமி அம்மனுக்கு மலர்களால் அலங்காரம் செய்யப்பட்டது. நடராஜ பெருமான், சிவகாமி தாயார் சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்தனர். இதைத்தொடர்ந்து நடராஜ பெருமான், சிவகாமி அம்மன் அலங்கரிக்கப்பட்டு திருமுறைகள், சிவபுராணம், நடராஜப் பத்து முழங்க மகா தீபாராதனை நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு நடராஜர் வழிபாட்டு குழுவினர் சுந்தரம் அடிகளார் தலைமையில் ஏற்பாடு செய்திருந்தனர். அனைவருக்கும் அருட் பிரசாதம் வழங்கப்பட்டது.

நடராஜ பெருமானுக்கு ஒவ்வொரு ஆண்டும் ஆறு நாட்கள் மட்டுமே சிறப்பு அபிஷேக, ஆராதனை நடைபெறுவது வழக்கம். அந்த வகையில் ஆனி மாதம் வரும் ஆனி திருமஞ்சனம் மற்றும் மார்கழி மாதம் நடைபெறும் ஆருத்ரா தரிசனம் ஆகிய நாட்களில் நடைபெறும் அபிஷேகம் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். அதைப் போலவே மாசி மாதம் நடைபெறும் நடராஜர் அபிஷேகம் சிறப்பு வாய்ந்தது.

கண்ணீர் அஞ்சலி



மிராஸ்.மெ.அன்புச்செல்வன்
அவர்களின் தகப்பனார்
வடவாளம் மிராஸ்
மிராஸ் மெ.மெய்யப்பன் பாண்டுரார்
பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் - அரசு மேல்நிலைப்பள்ளி வடவாளம்
13.05.2023 அன்று இயற்கை எய்தினார். அன்னாரது இறுதி
ஊர்வலம் நல்லடக்கம் 14.05.2023 ஞாயிற்றுக்கிழமை
காலை 9.00 மணியளவில் பிலாவிடுதி அவரது இல்லத்திலிருந்து
நடைபெறும் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்...
கண்ணீருடன்...
குடும்பத்தினர்கள், உறவினர்கள் மற்றும்
கிராம பொதுமக்கள் - வடவாளம், பிலாவிடுதி
PRS

# புதுக்கோட்டை டீம் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையில் உலக செவிலியர் தின விழா





**புதுக்கோட்டை, மே.14-**

நவீன செவிலியர் முறையை உருவாக்கிய இங்கிலாந்தைச் சேர்ந்த ஃப்ளோரன்ஸ் நைட்டிங்கேள் அம்மையாரின் பிறந்த நாளை கொண்டாடும் விதமாக, உலக செவிலியர்களின் உன்னதமான சேவையை அங்கீகரிக்கவும் ஒவ்வொரு ஆண்டும் மே 12-ம் தேதி உலக செவிலியர் தினம் அனுசரிக்கப்படுகிறது. இதனை முன்னிட்டு டீம் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை வளாகத்தில் மருத்துவமனையின் நிர்வாக இயக்குநர் டாக்டர் கே.ஹெச். சலீம் தலைமையில் செவிலியர்களின் உன்னதமான பணியைப் பற்றியும் கொரோனா போன்ற தொற்று நோய் காலத்திலும் செவிலியர்கள் சிறப்பாக பணியாற்றி பெருமை சேர்த்தீர்கள் மற்றும் அருவருப்பும் வெறுப்பும் இல்லாமல் ஆத்மார்த்தமாக பணியாற்றும் பூமியின் தேவதைகள் செவிலியர்கள் என உளமார பாராட்டி உலக செவிலியர் தின வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

இவ்விழாவின் சிறப்பு அம்சமாக செவிலியர்களுக்கு தொற்று நோய் பற்றிய விழிப்புணர்வு பயிற்சி நடத்தப்பட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது. இவ்விழாவில் மருத்துவமனையின் பொது மேலாளர் ஜோசப் மற்றும் செவிலியர் கண்காணிப்பாளர் யோகேஸ்வரி வாழ்த்துரை வழங்கினார்கள். இவ்விழாவில் கலந்து கொண்ட மருத்துவமனையின் செவிலியர்கள் மற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் இனிப்பு வழங்கி சிறப்பிக்கப்பட்டது, விழாவின் இறுதியாக மதுபாலன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

# கடலுக்கு அடியில் ஒரு Highway-ஏ இருக்கேப்பா’ 7000 ஆண்டுகளுக்கு முந்தைய சாலை கண்டுபிடிப்பு

குரோஷி , மே.14-

குரோஷியாவில் பல ஆயிரம் வருடங்களுக்கு முந்தைய சாலையை கடலுக்கு அடியில் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இது தொடர்பான புகைப்படம், வீடியோ போன்றவை வைரலாகி வருகின்றன.

குரோஷியாவின் கோர்குலா தீவின் கடற்கரையில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் நம்பமுடியாத ஒரு கண்டுபிடிப்பை கண்டறிந்துள்ளனர். குரோஷியாவில் உள்ள ஜாதர் பல்கலைக்கழகம், கடந்த 2021-ம் ஆண்டு கோர்குலாவுக்கு அருகில் உள்ள கடல் பகுதியில் எடுக்கப்பட்ட செயற்கைக்கோள் புகைப்படங்களை ஆய்வு செய்தது.

அப்போது பல ஆண்டுகளுக்கு முன்பு செயற்கை தீவாக இருந்த சோலின் பழங்கால நகரம் கண்டுபிடிக்கப்பட்டது. தற்போது அதே ஆராய்ச்சியாளர்கள் நீரில் மூழ்கிய சோலின் கற்கால தளத்தைச் சுற்றி ஆய்வு செய்தனர். அப்போது மத்திய தரைக்கடலின் மேற்பரப்புக்கு அடியில் (13 - 16 அடியில்) 13 அடி அகலமுள்ள புதைந்துபோனபலஆயிரம் ஆண்டுகள் பழமையான நெடுஞ்சாலையை கண்டுபிடித்துள்ளனர்.

இந்த நெடுஞ்சாலை ஒரு பண்டைய Hvar கலாச்சாரத்தால் கட்டப்பட்டதாக நம்பப்படுகிறது. மேலும் அந்தசாலை ஒரு காலத்தில் பயன்பாட்டில் இருந்திருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது. இப்போது நீரில் மூழ்கியிருக்கும் சோலின் கற்கால தளத்தை கோர்குலா தீவுடன் அது இணைத்திருக்கலாம் எனவும் சந்தேகித்துள்ளனர் ஆய்வாளர்கள். இந்த வியக்க வைக்கும்



கண்டுபிடிப்பின் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் சமூகவலைத்தளங்களில் வெளியாகி பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்த கற்கால சாலையானது கிமு 4,900க்கு முந்தையதாக இருக்கலாம், அதாவது சுமார் 7,000 ஆண்டுகள் பழமையானது என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

குரோஷியாவில் உள்ள ஜாதர் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாதா பரிகா என்பவரின் தலைமையில் இந்த ஆராய்ச்சி நடைபெற்றுள்ளது. இவருடன் டுப்ரோவ்னிக் அருங்காட்சியகங்கள், கோர்குலா நகர அருங்காட்சியகம் மற்றும் கஸ்டெலா நகரத்தின் அருங்காட்சியகம் போன்றவற்றின் ஆராய்ச்சியாளர்களும் இந்த ஆராய்ச்சியில் பங்கேற்றுள்ளனர். இக்குழுவானது ரேடியோகார்பன் பகுப்பாய்வைப் பயன்படுத்தி, அந்தசாலை பயன்படுத்தப்பட்ட ஆண்டை கணித்துள்ளனர்.

இந்த பகுதியில் கண்டறியப்பட்ட பழமையான தொல்பொருளில் இந்த சாலை மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

மேலும், அந்த சாலை மிகவும்கச்சிதமாகக்கற்கள் மற்றும் பலகைகளால் அடுக்குகளாகஉருவாக்கப் பட்டுள்ளதாகவும் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய இந்த நெடுஞ்சாலையின் கண்டுபிடிப்பு குறிப்பிடத்தக்க ஒன்றாகும். ஏனெனில் இது பிராந்தியத்தின் பண்டைய வரலாற்றை வெளிச்சம் போட்டுக்காட்டுகிறது. Hvar கலாச்சாரம் மிகவும் மேம்பட்ட ஒன்றாக இருந்தது. அந்த மக்கள் ஈர்க்கக்கூடிய கட்டமைப்புகளை உருவாக்கும் திறன் கொண்டவர்கள் என்பதையும் இது காட்டுகிறது.

# கடலில் கரை ஒதுங்கிய ராட்சத திமிங்கலம் உயிருடன் இருப்பதால் மீட்டு நடுக்கடலில் விட்டனர்

காரைக்கால், மே, 14 -

காரைக்கால் மாவட்டம், வாஞ்சூரில் உள்ளதனியார்துறைமுகம் அருகே கடலில் ராட்சத திமிங்கலம் ஒன்று கரை ஒதுங்கி உள்ளது. காற்றின் வேகத்தின் காரணமாக திமிங்கலம் கரை நோக்கி வந்திருக்கலாம் என மீனவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சுமார் 25 டன் எடையும், 60 அடி நீளமும் கொண்ட திமிங்கலம் உயிருடன் இருப்பதால் திமிங்கிலத்தை பத்திரமாக மீட்டு நடுக்கடலில் விடும் முயற்சியில் பட்டினச்சேரி மீனவ பஞ்சாயத்தர்கள் மற்றும் மீனவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

மீனவர்கள் தங்களது சொந்த விசைப்படகின் மூலம் இழுத்துச் சென்று நடுக்கடலில் விட முயற்சித்து வருகின்றனர். தனியார் துறைமுகத்தில் பல்வேறு ரசாயனங்கள் இறக்குமதி செய்யப்படுவதின் காரணமாக திமிங்கலம் கரை ஒதுங்கியதா என கடல் உயிர் ஆர்வலர்கள் கேள்வி எழுப்பி உள்ளனர்.

திமிங்கலத்தை படம் எடுக்க பத்திரிகையாளர்கள் தனியார் துறைமுகத்தின் உள்ளே அனுமதிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# ஒரு கோடி ரூபாய் செலவில் நடைபெற உள்ள பணிகள் குறித்து எம்எல்ஏ நாஜிம் ஆலோசனை

காரைக்கால், மே, 14 -

காரைக்கால் தெற்கு தொகுதிக்கு உட்பட்ட கீழ ஒடுத்துறை, பச்சூர் வடக்கு பேட், கக்கன் நகர், கருவக்குளம், தக்களூர்பேட் ஆகிய பகுதிகளில் சாலை அமைப்பதற்கும், சமுதாயக்கூடத்தை மேம்படுத்துவதற்கும் ஒரு கோடி ரூபாய் செலவிட திட்டமிடப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் துறை நிதி மூலமாக தொகை ஒதுக்கி அதற்காக எந்தெந்த பணிகளை செய்வது என்பது குறித்து அதிகாரிகளுடன் காரைக்கால் தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம். ஹெச்.நாஜிம் பார்வையிட்டார்.

ஆதிதிராவிடர் நலத்துறை உதவி இயக்குநர் மதன்குமார், PADST-DC செயற்பொறியாளர் பக்தவச்சலம், உதவி பொறியாளர் பூங்காவனம் ஆகியோர் உடன் இருந்தனர்.

# கர்நாடகாவில் காங்கிரஸ் அபார வெற்றி பிரசாந்த் கிஷோரையே மிஞ்சிய புதிய தேர்தல் வியூகர்

டெல்லி , மே, 14 -

கர்நாடக மாநிலத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி தனி பெரும்பான்மையுடன் வென்றதற்கு தேர்தல் பிரசார வியூகர் சுனில் கனுகோலு வகுத்துக் கொடுத்த ஆலோசனைகளே முக்கியக் காரணம் எனக் கூறப்படுகிறது.

கடந்த 6 மாத காலமாகக் கடும் வெயிலைவிட, அதிகமாய்க் கொதித்த கர்நாடக தேர்தல் களத்தில், நேற்று நடைபெற்ற வாக்கு எண்ணிக்கை மூலம் காங்கிரஸ் தனிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றுள்ளது. ஆட்சி அமைக்க 113 இடங்கள் மட்டுமே தேவையான நிலையில், 138-க்கும் அதிகமான இடங்களை கைப்பற்றியுள்ளது.

இதனையடுத்து இன்று அக்கட்சியின் எம்.எல். ஏக்கள் கூட்டம் நடைபெற இருக்கும் நிலையில், விரைவில் அக்கட்சி ஆட்சி அமைக்கும் எனத் தெரிகிறது. இந்த நிலையில் கர்நாடக காங்கிரஸின் வெற்றிக்குப் பணியாற்றிய தேர்தல் வியூக வகுப்பாளர் சுனில் கனுகோலு பற்றி அதிகம் பேசப்படுகிறது. தேர்தல் பிரசார வியூகர், வல்லுநர் என அழைக்கப்படும் பிரசாந்த் கிஷோருக்கு அடுத்தப்படியாக சுனில் கனுகோலு, இன்று அதிகம் பேசப்படும் நபராக இருக்கிறார். அதற்குக் காரணம் கர்நாடகாவில் மத்தியிலும் மாநிலத்திலும் பாஜகவை வீழ்த்தி காங்கிரஸை அரியணையில் ஏற்றியிருப்பதுதான்.

2024 நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு, தேர்தல் பிரசார வியூகரான பிரசாந்த் கிஷோர், காங்கிரஸ் கட்சியில் இணைந்து செயலாற்றுவார் எனப் பேசப்பட்டது. ஆனால், இறுதியில், பிரசாந்த் கிஷோர் காங்கிரஸுக்கு சில ஆலோசனைகளை வழங்கிவிட்டு, அக்கட்சிக்கு மறுப்பு



தெரிவித்து ஒதுங்கிக் கொண்டார். இந்த நிலையில்தான் முன்னாள் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி 2024ஆம் ஆண்டிற்கான 2 உயர்மட்ட குழுவில் குலாம்நபி ஆசாத், ஆனந்த் சர்மா ஆகியோரை நியமித்தார். அத்துடன், 2024 நாடாளுமன்றத் தேர்தல் பணிக்குழுவில் பணியாற்றுவதற்குத் தேர்தல் வியூகவாதி சுனில் கனுகோலுவையும் நியமித்தார். அதற்கு முன்பாக, தற்போதைய கர்நாடகத் தேர்தல் பணிக்குழுவிலும் நியமிக்கப்பட்டார், சுனில் கனுகோலு.

பிரசாந்த் கிஷோரை போல் பெரிய அளவில் பேசப்படாதவர் சுனில் கனுகோலு. அதாவது சமூக ஊடகங்களில் இருந்து கொஞ்சம் விலகி நின்றவர். என்றாலும், 2014ஆம் ஆண்டுவரை பிரசாந்த் கிஷோரிடம் பணியாற்றியவர் இந்த சுனில். ஆனாலும், இவருக்கும் கிஷோருக்கும் செயல் முறைகள் பெரிய அளவில் வேறுபடுகின்றன. குறிப்பாக, 2016இல் திமுக தொடங்கிய ‘நமக்கு நாமே’ பிரசார பயணத்துக்கு சுனிலின் ஆலோசனைதான் பெரும் பங்கெடுத்ததாகக் கூறப்படுகிறது. அவர் கொடுத்த இந்த ஐடியாதான், மு.க.ஸ்டாலினின் இமேஜை மக்கள் மத்தியில் உயர்த்தியதாகக் கூறப்படுகிறது. இதன்மூலம் தேர்தலுக்கு முன்பு ஓர் அணியை உருவாக்கும் சுனில், அதைத் தேர்தலுக்குப் பிறகும் வலிமையாக வைக்கும் அளவுக்கு வலிமை படைத்தவர் எனப் பலரால் கூறப்படுகிறது.

இதனால்தான் பிரசாந்த் கிஷோரிடமிருந்து அவர் விலகி நிற்கிறார் என்று கூறப்படுகிறது. 2016ஆம் ஆண்டு திமுகவுக்காக சுனில் பணியாற்றியபோதும் அந்த ஆண்டு, திமுக தேர்தலில் தோல்வியடைந்தது என்பது குறிப்பிடத்தக்கது. அதன்பிறகு, சுனிலின், தேர்தல் பயணம் மத்திய உள் துறை அமைச்சர் அமித்ஷாவுடன் பிப்ரவரி 2018 வரை நீடித்தது. 2019 நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக, மீண்டும் திமுக முகாமுக்குத் திரும்பினார். 39 நாடாளுமன்றத் தொகுதிகளில் 38 இடங்களை ஐக்கிய முற்போக்குக் கூட்டணி வெற்றிபெற உதவினார். ஆனால், திமுக தலைமை, பிரசாந்த் கிஷோரின் உதவியை நாடியதையடுத்து, கடந்த ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலுக்கு முன்பாக சுனில் திமுகவில் இருந்து பிரிந்தார். பிரசாந்த் கிஷோருடன் இணைந்து பணியாற்றவேண்டும்என திமுக சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டாலும் அதைசுனில்ஏற்கவில்லை. அதே நேரத்தில் பிரசாந்த் கிஷோரும் சுனிலுடன் பணியாற்ற ஒப்புக்கொள்ள மாட்டார் என்று திமுக உணர்ந்திருந்தது.

அதே நேரத்தில், அதிமுகவுக்கு தேர்தல் வியூகங்களை அமைத்துக் கொடுத்தார், சுனில். ஆனாலும், அதிமுகவின் தோல்வி உறுதியானது. இருந்தாலும், சுனில் தற்போதும் முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமியுடன் தொடர்பில் இருப்பதாக விவரம் அறிந்தவர்கள் கூறுகிறார்கள். இந்த நிலையில்தான், காங்கிரஸின் முன்னாள் தலைவர்கள் சோனியாவும், ராகுலும் சுனிலை சந்தித்தனர். அந்தப் பேச்சுவார்த்தைக்குப் பிறகு, சுனில் கனுகோலுவின் ஹைதராபாத்தை தளமாகக் கொண்ட மைண்ட் ஷேர் அனலிட்டிக்ஸ் நிறுவனத்திற்கு கர்நாடக பிரசாரத்திற்கான ஒப்பந்தத்தை காங்கிரஸ் கொடுத்தது. அதன் விளைவு, அவர்களின் நம்பிக்கையை வெற்றிபெற வைத்துள்ளார். இதற்கு முக்கியக் காரணம், சுனில் தென்னிந்தியாவைச் சேர்ந்தவர் என்றும், அவருக்குப் பலமொழிகள் தெரியும் என்றும் கூறப்படுகிறது. குறிப்பாக, தென்னிந்தியாவின் அரசியலையும் உள்ளுணர்வையும் நன்கு புரிந்துகொண்டதால்தான், அதைத் தன்னுடைய செயல்கள் மூலம் மாற்றிக் காட்டி காங்கிரஸுக்கு வெற்றியைப் பெற்றுத் தந்துள்ளார் என்கின்றனர் விவரமறிந்தவர்கள். இவர், தென்னிந்தியாவின் தேர்தல் வியூகம் மட்டுமல்ல, வட இந்தியாவின் நாடித் துடிப்பையும் நன்கறிந்தவர் என்கின்றனர். மேலும், குமரி முதல் காஷ்மீர் வரையிலான ராகுல் காந்தியின் நடைப்பயணமே, சுனில் போட்டுக்கொடுத்த ஸ்கெட்ச்தான் என்கின்றனர்.

காங்கிரஸ் கட்சியின் 2024ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் பணிக்குழுவில் இடம்பிடித்துள்ள தேர்தல் நிபுணர் சுனில் கனுகோலு, தனது மைண்ட்சேர் அனலிட்டிக்ஸ் குழுவுடன் காங்கிரஸ் கட்சிக்காகக் களம் இறங்குகிறார். அவருடைய இந்த வெற்றிக்கு, அவர் குழுவில் உள்ளவர்களின் பலமே என்று கூறப்படுகிறது.

வரலாறு நாளிதழ்

நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை

காலிப் பணிஇடங்கள் 2

PHOTOSHOP | PAGEMAKER | INDESIGN

தமிழ் தட்டச்சு நன்கு பயின்ற மற்றும் அனுபவம் உள்ள DTP ஆப்பரேட்டர்கள் சமூக ஊடகத்தில் ஆர்வமுள்ளோர் உடனடி தேவை.


நாளிதழ் மற்றும் தொலைக்காட்சிகளில் பணியாற்றியவர்களுக்கு முன்னுரிமை

திறமைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்

தமிழகம் முழுவதும் மாவட்டம் மற்றும் தாலுகா வாரியாக பணியாற்றிட செய்தியாளர்கள் & புகைப்படக்காரர்கள் தேவை. தபால் மூலமாக மட்டும் விண்ணப்பிக்கவும்


மேலும் தொடர்புக்கு :

TS.No.1103, பெரியார் நகர், இராஜகோபாலபுரம், புதுக்கோட்டை - 3. செல் : 98420 98534



# ராகுலுக்கு தண்டனை வழங்கிய நீதிபதியின் பதவி உயர்வு நிறுத்தி வைப்பு

# சுற்றுலா சென்ற இடத்தில் காட்டு யானையிடம் சேட்டை நபர் கைது





# இபிஎஸ் ஒரு சண்டிக்குதிரை எதுக்கும் பயன்படாது


சென்னை / புதுக்கோட்டை | 13.05.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை

வரலாறு

நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

**சம்பாஜி** , இந்தியப் பேரரசர் (பி.1657) (இ.1689)



**அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர்** , இந்திய வழக்கறிஞர், அரசியல்வாதி (பி.1883) (இ.1953)



**அயூப் கான்** , பாக்கிஸ்தானின் 2வது அரசுத்தலைவர் (பி.1907) (இ.1974)



**பாப் வுல்மர்** , இந்திய-ஆங்கிலேயத் துடுப்பாளர், பயிற்சியாளர் (பி.1948) (இ.2007)



## இன்றைய நினைவு நாள்

**ஸ்ரீதரன் ஜெகநாதன்** , இலங்கைத் துடுப்பாட்ட வீரர் (பி.1951) (இ.1996)



**அஸ்கர் அலி என்ஜினியர்** , இந்திய எழுத்தாளர், சமூக செயற்பாட்டாளர் (பி.1939) (இ.2013)



**ஆன்ட்ரூ சைமன்ஸ்** , ஆத்திரேலியத் துடுப்பாட்ட வீரர் (பி.1975) (இ.2022)

